சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்

கிழக்குப் பல்கலைக் கழகம்

# ஆய்வுக் கட்டுரைகள் 2018

# Abstracts

3 ஆவது உலக ஆய்வு மாநாடு

ஜீலை - 15 - 18

# 5. யாழ்ப்பாண அரசும் விவசாயப் பொருளாதாரமும் : நெல், பருத்தி, சாயவேர் எனும் முதன்மைக்கூறுகளை உட்கட்டு மானப்படுத்திய ஓர் நோக்கு

பேராசிரியர்.க.அருந்தவராஜா,

செல்வி.சி.சிவராசசிங்கம்,

ஆய்வுச்சுருக்கம்

தமிழர்,தமிழ்ப் பாரம்பரியம் எனும் கட்டுக்கோப்புக்கு அன்றைய கால ஆட்சிமுறைகளின் கட்டுமானங்களும் கைகோக்கின்றன. அந்த வகைப்பாட்டிலே வட இலங்கையின் யாழ்ப்பாண அரசிற்கென ஒரு தனித்துவமான வரலாற்றுத்தடம் உண்டு. இது ஏறத்தாழ பதின்மூன்றாம் நூற்றாண்டிலே தோற்றம் பெற்று பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை நிலை பெற்றிருந்தது. இவ்விராட்சியம் தீவுகள், மாதோட்டம், பல்லவராயன்கட்டு, பூநகரி, மன்னார் மற்றும் வன்னிப்பிரதேசம் என்பவற்றை விஸ்தரிப்பிற்குட்படுத்தியதாக அமைந்தது.

இவ்வரசு தனது பொருளாதார வாணிபத்தொடர்புகளை பெரும்பான்மையாக விவசாயத்து வாணிபத்தினாலேயே ஈட்டிக்கொண்டது. விவசாய உற்பத்தியில் நெல் பிரதான இடத்தினை வகிக்கின்றது. அதனைவிட*"குரக்கன், வரகு, பயறு, எள்ளு, கரும்பு, கமுகு, பருத்தி* முதலானவையும் விவசாயப்புலத்திலே புடம் போடப்பட்டன. பனைச் சாரு உற்பத்திகளும் சாயவேர்,முத்து,சங்கு எனும் ஏற்றுமதி வாணிபமும் சிறப்பாக நிலைபெற்றது. யாழ்ப்பாண இராட்சியத்து நெல் உற்பத்தியானது இறக்குமதிகளில் தங்கியிருந்தது. இதற்கான நெல்விதை மதுரை, தஞ்சாவர் போன்ற பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. அது மட்டுமன்றி நெல் உற்பத்திப் பெருக்கிற்காகச் சிறந்த நீர்ப்பாசனத் திட்டமும் அமைக்கப்பட்டது. யாழ்ப்பாண இராட்சியத்தின் விவசாயப் பொருளாதார வருமானத்தில் அதிக வருமானத்தினை அரசிற்கு பெற்றுத்தந்ததில் நெல்லுக்கு அடுத்த படியாக பருத்தி விளங்குகின்றது. நூல் திரிக்கப்பட்டு ஆடைகள் நெய்யப்பட்டு வெளிநாடுகள் வரை ஏற்றுமதி செய்யக்கூடிய கட்டமைப்பில் இது திகழ்ந்துள்ளது.

இதேபோல் சாயவேர் என்பதுவும் இலாபத்தின் முதலீட்டு நிலைப்பாடாகத் திகழ்ந்துள்ளது. இது தீவகப் பகுதிகளிலும், வலிகாமம், வடமராட்சி ஆகிய இடங்களிலிருந்தும் பிடுங்கி எடுத்து ஆடைகளுக்குச்சாயமூட்டப் பயன்பட்டன. இது வெளிநாடுகளுக்கும் ஏற்றப்பட்டது. பனை உற்பத்திப் பொருட்களும் யாழ்ப்பாண இராட்சிய கால விவசாயப் பொருளாதாரத்தில் முதன்மை பெற்றன. யாழ் மக்கள் இன்றுவரை பனை உற்பத்தி நுகர்வுகளில் ஆர்வலராக இருப்பது இதற்குச்சிறந்த எடுத்துக்காட்டாகும். பனைவள உற்பத்தியில் அதிகபட்ச நன்மையே தீமைகள் குறைவு. முழுக்கமுழுக்க வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் அமையப்பெற்ற இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைவது, யாழ்ப்பாண

அரசு விவசாயப் பொருளாதாரத்தினை நெல், பருத்தி, சாயவேர் என்பவற்றின் மூலம் எவ்வாறு ஈட்டிக் கொண்டது என்பதனைக் கண்டறிதலும் அவற்றின் ஏற்றுமதிகள் தொடர்பாக ஆராய்தலுமாகும். இவ்வாய்வில் முதற்தர மற்றும் இரண்டாம் நிலை ஆதாரங்கள் ஆய்வினது தேவை கருதி பயன்படுத்தப்பட்டுள்ளன. முதற்தர ஆதாரங்கள் வரிசையில் யாழ்ப்பாண இராட்சிய கால இலக்கியங்கள், அறிக்கைகள் பிரதான இடத்தினைப் பெறுகின்றன. முதற்தர ஆய்வுகளை அடிப்படையாக வைத்து பிற்பட்ட காலங்களில் எழுதப்பெற்ற நூல்கள்,கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள் என்பவை இரண்டாம் நிலை ஆதாரங்கள் வரிசையிலும் இடம்பெற்றுள்ளன. தொகுத்து நோக்கின் யாழ்ப்பாண இராட்சிய காலத்தில் நெல், பருத்தி, சாயவேர் எனும் விவசாய உற்பத்திகள் சிறப்பான பொருளாதாரத்தினை ஈட்டுவதற்கு வழிசமைத்தன என்பது இவ்வாய்வின் ஊடாக வெளித்தெரியும் உண்மையாகும்.

திறவுச் சொற்கள்: யாழ்ப்பாண அரசு, விவசாயம், பொருளாதாரம், நெல், பருத்தி, சாயவேர், கட்டுமானம்